தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

25.10.2012 A.M

## மிளகாய் சாகுபடி தொழில்நுட்பங்கள்



மானாவாரி கரிசல் நிலங்களில் சாகுபடி செய்யப்படும் பயிர்களில் மிளகாய் முக்கியப் பயிராகும்.

ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் அதிக பரப்பளவில் மானாவாரியாக சாகுபடியாகிறது. இதில் சம்பா ரகங்களை விட மானாவாரி ரகங்களே அதிகம்.

மானாவாரி மிளகாய் சாகுபடியில் ஆரம்ப கால விதை முளைத்தல், இளம் செடிகளின் வளர்ச்சி ஆகியனவற்றில் ஏற்படும் பிரச்னைகள் மற்றும் மானாவாரி நாற்றங்காலில் ஏற்படும் பயிர் இழப்பு ஆகியவையும் முக்கியப் பிரச்னைகளாகும்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் மானாவாரி பயிராக சுமார் 2400 ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது.

ரகங்களைப் பொருத்தவரை கே1,கே2 போன்ற உயர் விளைச்சல் சம்பா ரகங்களும், நாட்டு முண்டு ரகங்களும், வீரிய ஒட்டு ரகங்களும் பயிரிடப்படுகின்றன. செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் இதன் பருவமாகும். மண் நல்ல வடிகால் வசதியுடன் கூடிய இருமண்பாடு கொண்ட 6.5-7.5 வரை கார அமிலத்தன்மை உள்ள நிலம் மிளகாய்க்கு ஏற்றது.

ஏக்கருக்கு விதை அளவு 400 கிராம் போதுமானதாகும். 2 கிலோ அசோஸ்பைரில்லம் அல்லது சூடோமோனாஸ் நுண்ணுயிர் உரத்தை 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து விதைத்த பின் நிலத்தில் போதுமான ஈரம் இருக்கும் போது தூவ வேண்டும். அடியுரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு உரம், 52 கிலோ யூரியா, 75 கிலோ சூப்பர் பாஸ்பேட், 32 கிலோ பொட்டாஷ் ஆகியன இட வேண்டும்.

நன்கு பொடிபட உழுது தயார் செய்யப்பட்ட நிலங்களில் புழுதியில் விதைகளை கைவிதைப்பாக வரிசையில் பருவ மழைக்கு முன்னர் விதைக்க வேண்டும். மேலும், நடவு சாகுபடி முறையில் சிபாரிசு செய்யப்படும் உர அளவில் பாதி மட்டுமே மானாவாரி மிளகாய்க்கு இட வேண்டும்.

பயிர் முளைத்து 45ஆம் நாள் களை எடுக்கும்போது மேலுரமாக 43 கிலோ யூரியா இட வேண்டும். மேலுரம் இடும்போது மண்ணில் போதுமான அளவு ஈரம் இருக்க வேண்டும்.

பயிர் முளைத்த 30 ஆம் நாள் களை எடுக்க வேண்டும். பூக்கள் கொட்டுவதைக் குறைக்கவும், பிஞ்சுகள் உதிர்வதைத் தவிர்க்கவும், பயிர் முளைத்த 90 மற்றும் 120 ஆம் நாளில் பிளானோபிக்ஸ் வளர்ச்சி ஊக்கி மருந்தை 4.5 லிட்டர் நீருக்கு 1. மி.லி. என்ற விகிதத்தில் கலந்து பூக்கள் மற்றும் பிஞ்சுகள் மேல் படும்படி தெளிக்க வேண்டும். வளர்ச்சி ஊக்க மருந்துடன் கலக்கும் நீர் உப்பு நீராக இருக்கக் கூடாது. நிலத்தில் போதுமான ஈரம் இருக்க வேண்டும்.

களை நிர்வாகத்தைப் பொருத்தவரை மிளகாய் விதை விதைத்து முதல் மழை கிடைத்தவுடன் ஹெக்டேருக்கு 1.0 லிட்டர் ப்ளுக்ளோரலின் அல்லது 3.3லிட்டர் பெண்டிமித்தலின் ஆகியனவற்றில் ஏதேனும் ஒன்றை 500 லிட்டர் நீரில் கலந்து முளைக்கும் முன் இடவேண்டிய களைக்கொல்லியாகத் தெளிக்க வேண்டும்.

பூச்சிகளின் வகைகள்

இலைப்பேன்: இவை இலையைச் சுருட்டி சாற்றை உறிஞ்சி விடும். இவற்றை கட்டுப்படுத்த

ஏக்கருக்கு மீத்தைல் டெமட்டான் 200 மி.லி. தெளிக்கலாம்.

அசுவினி: இவை கூட்டமாக இலையின் மேல் குருத்துக்களில் பூ மொட்டுகளில் மற்றும் காய்களில் காணப்படும். அசுவினியைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசிப்பேட் 200 கிராம் அல்லது மாலத்தியான் 200 மி.லி. தெளிக்கலாம்.

காய்ப் புழு: புரடீனியா மற்றும் பச்சைக் காய்ப் புழுக்கள் இலைகளையும், காய்களையும் தின்று பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்திட ஆமணக்குச் செடியை வரப்பு

ஓரத்தில் பொறிப் பயிராக விளைவித்து புரடீனியா பூச்சியின் முட்டைக் குவியல்களைக் கவர்ந்து அழிக்கலாம்.

வேப்ப எண்ணெய் 3 சதம் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு 5 சதத்தை சோப்பு போன்ற ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்கவும். பூச்சியின் தாக்குதல் பொருளாதார சேத நிலையைத் தாண்டும் பட்சத்தில் கீழே குறிப்பிடும் ரசாயனப் பூச்சி மருந்துக் கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும்.

மிளகாய் மொசை நோய்: அசுவினியைக் கட்டுப்படுத்த வேண்டும். அசுவினி இலைப்பேனைக்

கட்டுப்படுத்திட மெதில் டெம்ட்டான் 25 மி.லி. மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து மூன்று முறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். மகசூலைப் பொருத்தவரை 210-240 நாட்களில் ஹெக்டேருக்கு 10-15 டன் பச்சை காய்களும், 2-3 டன் காய்ந்த மிளகாய் வற்றல் மகசூலாகக் கிடைக்கும்.

அறுவடை பின்செய் நேர்த்தி முறைகள்: மிளகாய் தோட்டத்தில் பழம் அழுகல் நோயை பூஞ்சாளக் கொல்லிகள் தெளித்து கட்டுப்படுத்திட வேண்டும். காய்கள், ஹிலியாத்திஸ் புரடீனியா புழுக்களால் தாக்கப்பட்டால் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ள வேண்டும்.

பொட்டாஷ் உரமிடுவதால் காய்களின் நிறமும், காரத்தன்மையும் அதிகரிக்கிறது. மிளகாய் செடியில் பழங்கள் முழுவதும் சிவப்பு நிறமாக மாறியவுடன் பழங்களைப் பறிக்கலாம். மிளகாய்ப் பழங்களை காம்புடன் பறிக்க வேண்டும்.

பழங்களைப் பறித்த அன்றே காயப் போட வேண்டும். மணல் பரப்பிய கலங்களில் பழங்களைப் பரப்பி உலர விட வேண்டும். மிதமான வெப்பநிலை உள்ள காலையிலும், மாலையிலும் 4 நாட்கள் உலர விட வேண்டும். நன்கு உலர்த்திய மிளகாய் வற்றலில் இருந்து காய்ப் புழு தாக்கிய மற்றும் பழம் அழுகல் நோய் தாக்கிய, நிறம் மாறிய சண்டு வற்றல் மேலும் உடைந்த மிளகாய் வற்றலை நீக்கி நல்ல வற்றலைப் பிரித்து எடுக்க வேண்டும்.

அறையின் ஈரம் மிளகாய் பழங்களைத் தாக்காமல் இருக்க தரையின் மேல் மணல் பரப்பி அதன் மேல் சேமிக்க வேண்டும். இரவில் மிளகாய்ப் பழங்கள் பனியால் பாதிக்கப்படாமல் இருக்க பழங்கள் மீது லேசான படுதா போட்டு மூடி வைக்கலாம்.

நல்ல நிறத்துடன் நீர் தெளிக்கப்படாமலும் காரல் வாடை இல்லாத வற்றல் மிளகாய் நல்ல குணத்துடன் நீண்டநாள் கெடாமலும் இருக்கும் என ராமநாதபுரம் தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

## பயறு வகைப் பயிர்களில் கூடுதல் மகசூல் பெற ...




பயறு வகைப் பயிர்களில் கூடுதல் மகசூல் பெற இரு முறை 2 சதம் டிஏபி கரைசலை கைத் தெளிப்பான் கொண்டு தெளிப்பது அவசியம் என்று வேளாண்மைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

பயறு வகைப் பயிர்கள்: கொண்டைக் கடலை, உளுந்து, தட்டைப் பயிறு, அவரை, பாசிப் பயறு, கொள்ளு, துவரை, சோயா மொச்சை ஆகிய பயறு வகைப் பயிர்களுக்கு டிஏபி கரைசல் பெரிதும் அவசியமானது.

டிஏபி கரைசல் தயாரிப்பு: டிஏபி கரைசலைப் பயிர்களுக்கு தெளிப்பதைவிட அந்தக் கரைசலைத் தயாரிப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். சிறிது அளவு மாறினாலும் கரைசல் தெளித்தும் எந்தவிதப் பயனும் கிடைக்காது. அளவு கூடினால் பயிர்கள் காய்ந்து விடும் அபாயமும் உள்ளது. எனவே, கரைசல் தயாரிப்பில் சரியான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம்.

ஓர் ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரம் போதுமானது. 4 கிலோ டிஏபி உரத்தை 10 லிட்டர் தண்ணீரில் இரவில் கரைத்து வைக்க வேண்டும். இரவு நேரத்தில் 4 முறை இந்தக் கரைசலை நன்கு கலக்க வேண்டும். காலையில் இந்தக் கரைசலை கலக்காமல் இருக்க வேண்டும். மேல் புறத்தில் தெளிந்திருக்கும் கரைசலைத் துணியால் வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கரைசலுடன் 190 லிட்டர் தண்ணீரை கலந்து ஒரு ஏக்கர் செடிக்கு தெளிக்கலாம்.

கைத் தெளிப்பான்: டிஏபி கரைசலைத் தெளிக்கும்போது விசைத் தெளிப்பான் பயன்படுத்தக் கூடாது. விசைத் தெளிப்பானில் கரைசல் முழுமையாக வெளியேறாது. நுரையே அதிகமாக வரும்.

எனவே, கைத் தெளிப்பான் பயன்படுத்தியே தெளிக்க வேண்டும். காலை அல்லது மாலை நேரத்தில் மட்டும் செடி முழுவதும் நனையும் வகையில் தெளிக்க வேண்டும். வெயில் இருக்கும் தருணத்தில் தெளித்தால் எந்தவிதப் பயனும் தராது.

எப்போது தெளிப்பது?: பயறு வகைப் பயிர்களை நடவு செய்த 30-வது நாளில் ஒரு முறையும், 45-வது நாளில் ஒரு முறையும் தெளிக்க வேண்டும். இல்லையெனில் பூக்கும் தருணத்தில் ஒரு முறையும், 15 நாள் இடைவெளிவிட்டு மறுமுறையும் தெளிக்கலாம்.

பயன்கள் என்ன?: பொக்கு காய்கள் வராது. பூக்கள் கொட்டாது. காய்கள் நன்கு திரட்சியாக வளரும். கூடுதல் மகசூல் பெறலாம். சாதாரணமாக ஒரு ஹெக்டேரில் 620 கிலோ பயறு வகைகள் கிடைத்தால் 2 சதம் டிஏபி தெளிப்பதன் மூலம் கூடுதலாக 20 சதம் வரை மகசூல் கிடைக்கும்.

அரசு மானியம்: டிஏபி தெளிப்புக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திடத்தின் மூலம், அரசு மானியமும் வழங்கப்படுகிறது. டிஏபி கரைசல் தயாரிப்புக்கு மானியமாக ரூ.500 வழங்கப்படுகிறது. விவசாயி கூடுதலாக ரூ.200 மட்டும் செலவு செய்தால் போதுமானது. இதேபோல், டிஏபி தெளிக்கும் பணிக்கும் ரூ.300 மானியம் வழங்கப்படுகிறது. இந்தப் பணிக்கு 2 ஆள்களைப் பயன்படுத்தினால் கூலியாக ரூ.600 வழங்க வேண்டியிருக்கும். அதில், 50 சதத்தை அரசே மானியமாக வழங்குகிறது.

தருமபுரி மாவட்டத்தில்...: தருமபுரி மாவட்டத்தில் நிகழாண்டு 26,157 ஹெக்டேரில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இதில், 860 ஹெக்டேர் பயிருக்கு அரசு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மானியத் தொகையை விவசாயிகளின் வங்கிக் கணக்கிலேயே வரவு வைக்கவும் வேளாண்மை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பப் பயிற்சி: டிஏபி கரைசல் தயாரிப்பு மற்றும் தெளிக்கும் முறைகள் குறித்து வேளாண்மைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு இலவசமாக தொழில்நுட்பப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. நல்லம்பள்ளி ஒன்றியத்துக்குள்பட்ட மாதேமங்கலம் குட்டூர் பகுதி விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறை சார்பில் புதன்கிழமை பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. கந்தசாமி என்பவரது விளைநிலத்தில் சுற்றுப் பகுதியைச் சேர்ந்த 50 விவசாயிகளை அழைத்து டிஏபி கரைசல் தெளிப்பது குறித்து நேரடி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

வேளாண்மைத் துறை துணை இயக்குநர் பி. வேணுகோபால், வேளாண்மை அலுவலர் எம். மணிராஜன், உதவி அலுவலர்கள் பி. மாதேஷ், ஜி. செல்வம், ஆர். சதாசிவம் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

நல்லம்பள்ளி ஒன்றியத்தில் மட்டும் 108 ஹெக்டேரில் பயறு வகைப் பயிர்களுக்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படவுள்ளது. எனவே, பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும் தவறாமல் 2 சதம் டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும் என்று வேளாண்மைத் துறை வலியுறுத்தியுள்ளது.

## ஆவின்பால் 100 சதவீதம் தரமானவை : அதிகாரிகள் விளக்கம்

ஆவின் பால் பண்ணைகளில் 19 விதமான பரிசோதனைகளுக்குப் பின்னர் 100 சதவீதம் தரமான பாலை வழங்குகிறோம் என ஆவின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில், அத்தியாவசியப் பொருளான பாலில் 68 சதவீதம் கலப்படம் இருப்பதாக உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்தது.

இந்த நிலையில், ஆவின் நிர்வாகத்தினர் கூறியது: தமிழகத்தைப் பொறுத்தவரையில் பால் கொள்முதல் செய்யப்படும் இடங்களில் தரம் பற்றி சோதனை நடத்தப்படுகிறது. பாலை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு சுத்தமாக பால் கறப்பதற்கு முறையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து பண்ணைக்கு பால் கொண்டு வருவது வரை 19 கட்டமாக பரிசோதனைகள் செய்யப்படுகிறது. அதை மக்களுக்கு 100 சதவீதம் தரமான பாலாக விநியோகிக்கப்படுகிறது. பாக்கெட்டில் அடைத்து விற்கும் பாலிலும் அதே தரம் கிடைக்கும் வகையிலும் உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. பால் தயாரிப்பு குறித்து அறிய தினமும் பண்ணைகளுக்கு வரும் மாணவர்களுக்கு, எவ்வித ஒளிவு மறைவும் இல்லாமல் அனைத்து பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காட்டப்படுகிறது. எனவே, எந்த நேரத்திலும் ஆவின் பால் தரத்தை சோதனை செய்து கொள்ளலாம் என ஆவின் நிர்வாகத்தினர் கூறினர்.

## பருவ மழை நீடிப்பு : நெல்லை மாவட்ட அணைகளில் நீர்மட்டம் உயர்வு

வடகிழக்குப் பருவமழை நீடித்து வருவதால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதேபோல மானாவாரி குளங்களுக்கும் தண்ணீர் வரத் தொடங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் தாமிரவருணி பாசனத்தில் கார் பருவத்தில் சாகுபடி நடைபெறவில்லை. இப்போது வடகிழக்குப் பருவமழை தொடங்கி இருப்பதாலும், மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் மழை நீடித்து வருவதாலும் மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. மானாவாரி குளங்களுக்கும் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

புதன்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 78, பாபநாசம் கீழ் அணை 28, சேர்வலாறு அணை 35, மணிமுத்தாறு அணை 105.6, கடனாநதி அணை 40, ராமநதி அணை 22, அம்பாசமுத்திரம் 58.3, சேரன்மகாதேவி 28. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 2011.34 கன அடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 913 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 378.43 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 134 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பருவ மழை நீடித்து வருவதால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

மானாவாரிக் குளங்களுக்கும் தண்ணீர் வரத் தொடங்கி இருப்பதால், பிசான பருவ சாகுபடிக்கு நாற்று பாவும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

உயர்ந்து வரும் நீர்மட்டம்: பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2 நாளில் 6 அடி உயர்ந்து 58.05 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 8 அடி உயர்ந்து 74.61 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 54.65 அடியாகவும், கடனாநதி 7 அடி உயர்ந்து 69 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்ந்து 78.50 அடியாகவும் இருந்தது.

இன்றைய வேளாண் செய்திகள்

25.10.2012 A.M

## நாட்டின் நெல் கொள்முதல் 3.50 கோடி டன்னாக உயர்வு



புதுடில்லி:அண்மையில் முடிவடைந்த, 2011-12ம் சந்தைப்படுத்தும் பருவத்தில் (அக்.,-செப்.,), மத்திய அரசு, விவசாயிகளிடமிருந்து, 3.50 கோடி டன் நெல்லை கொள்முதல் செய்துள்ளது. இது, இதற்கு முந்தைய வேளாண் பருவத்தில், 3.42 கோடி டன்னாக இருந்தது.

சட்டீஸ்கர் மற்றும் பீகார் போன்ற மாநிலங்களில், இதன் உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. இதையடுத்து, நெல் கொள்முதல் சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.ஒட்டு மொத்த கொள்முதலில், பஞ்சாப் மாநிலத்தில் இருந்து மட்டும், அதிகபட்சமாக 77 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, ஆந்திரா ( 75 லட்சம் டன்), சட்டீஸ்கர் (41.10 லட்சம் டன்), உத்தர பிரதேசம் ( 33.50 லட்சம் டன்) மற்றும் ஒடிசா ( 28.40 லட்சம் டன்) ஆகியவை உள்ளன.

மத்திய அரசு, இந்திய உணவுக் கழகம் மற்றும் மாநில முகமை அமைப்புகள் வாயிலாக நெல் கொள்முதல் செய்து வருகிறது.மேலும், இது, விவசாயிகளுக்கு, குறைந்தபட்ச ஆதரவு விலை கிடைப்பதை உறுதி செய்கிறது.

## விவசாயிகள் மாநாடு

குஜிலியம்பாறை:தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், குஜிலியம்பாறை ஒன்றிய மாநாடு, புளியம்பட்டியில் நடந்தது. ஒன்றிய தலைவர் சவுந்திரராஜன் தலைமை வகித்தார். மாநில துணை

தலைவர் செல்வராஜ் முன்னிலை வகித்தார்குஜிலியம்பாறையை தனி தாலுகாவாக அறிவிக்க வேண்டும். ஆர்.கோம்பையில் புதிய அணை கட்டவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. ஒன்றிய தலைவராக காளியப்பன், செயலாளராக தங்கவேல், பொருளாளராக ஆறுமுகம் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், 15-பேர் கொண்ட ஒன்றிய குழு தேர்வு செய்யப்பட்டது. விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சச்சிதானந்தம், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் குணசேகரன், பால் உற்பத்தியாளர் சங்க வட்ட செயலாளர் சங்கர், விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஆறுமுகம், ரங்கசாமி, தியாகராஜன், இளையராஜா பங்கேற்றனர்.

## பழநி விவசாயிகளுக்கு துவரைநாற்று நடவு முறை திட்டம்

பழநி,:பழநி வட்டாரத்தில் துவரை உற்பத்தியை அதிகரிப்பதற்கு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நாற்று நடவு முறை துவரை சாகுபடி திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இதில் 25 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு விவசாயிக்கு ஒரு எக்டர் வீதம், மொத்தம் 25 எக்டர் பரப்பிற்கு செயல் விளக்கத்திடல்கள் அமைக்கும் பணி நடக்கிறது. கணக்கன்பட்டி, நெய்க்காரப்பட்டி கரடிகூட்டம் கிராமங்களில் "துவரை சமுதாயநாற்றாங்கால்' அமைக்கப்பட்டு, சொட்டுநீர் பாசன வசதியுடன் நாற்றுக்கள் நடவும் பணி நடக்கிறது. துவரை நாற்று நடும் பணியை பழநி வேளாண்மை <உதவி இயக்குனர் வெள்ளைச்சாமி துவக்கி வைத்தார். அலுவலர்கள் கணேசன், துரைச்சாமி உட்பட ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

## ஆட்கள் கிடைக்காமல் :அதிக கூலி கொடுக்கும் நிலையில் விவசாயிகள்

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதி விவசாய பணிக்கு அதிக கூலி கொடுத்தும்,ஆட்கள் கிடைக்காமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த சில மாதங்களாக மழை இல்லை. இதனால் விவசாய பணியும் செய்யாமல் இருந்தனர். இந்நிலையில், கடந்த இரு வாரங்களாக பெய்து வரும் மழையால், விவசாய பணியை
துவக்கியுள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், மல்லி, அப்பையநாயக்கர்பட்டி உட்பட பல பகுதிகளில், நெல், மக்கா சோளம் நடவு பணி தீவிரமாக நடந்து வருகிறது. ஆனால் பல இடங்களில் ஆட்கள் கிடைக்காத நிலையால், பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.ஏற்கனவே தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில், கிராமங்களை சேர்ந்தவர்கள் அதிகளவு வேலைக்கு செல்வதால், அதிக கூலி கொடுத்தும்,ஆட்கள் கிடைக்காது,விவசாய பணியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயி கிருஷ்ணன் ,""கடந்த ஓராண்டாக மழை பெய்யாமல் இருந்தது.இதனால் எவ்வித விவசாயமும் செய்ய முடியவில்லை. தற்போது மழை பெய்வ
தால் பணியை துவக்கியுள்ளேன். ஆனால் நடவு பணிக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. வெளியூர்களிலிருந்து ஆட்களை கொண்டு வர வேண்டியதுள்ளது. அவர்களுக்கு அதிக கூலியும் கொடுக்க வேண்டியதுள்ளது. தற்போதய நிலையில் உரம், விதை உட்பட அனைத்து

பொருள்களும் விலை உயர்ந்த நிலையில், கூலியும் அதிகம் கொடுக்க , விவசாயத்திற்கு பணம் அதிகம் செலவிட வேண்டியதுள்ளது," என்றார்.

**புதர் மண்டிய காயல்குடி ஆறு :கவலையில் விவசாயிகள்**

ஸ்ரீவில்லிபுத்தூர்:புதர் மண்டிய காயல்குடி ஆற்றால், தண்ணீர் செல்வதில் தடை ஏற்படுவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில், கடந்த ஒரு வாரமாக மழை பெய்து வருகிறது. இதனால், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் பகுதி கண்மாய்களுக்கு, சிறிதளவு தண்ணீர் வருகிறது. இந்நிலையில், கங்காகுளம்,
அணைத்தலைப்பட்டி, அச்சம்தவிர்த்தான் கண்மாய்களுக்கு, தண்ணீர் செல்லும் காயல்குடி ஆறு, பராமரிக்கப்படாமல் புதர் மண்டி உள்ளது. தற்போது மழை பெய்தாலும், புதர்களில் பல இடங்களில் தண்ணீர் ÷தங்கி, கண்மாய்களுக்கு போய் சேருவதில், சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள், கண்மாய்களுக்கு தண்ணீரை பெருக்க முடியாத நிலையில் உள்ளனர். இதை தவிர்க்க, பொதுப்பணித்துறையினர், காயல்குடி ஆற்று பகுதியில் மண்டியுள்ள புதர்களை அகற்றி, தண்ணீர் தடையின்றி செல்ல, நடவடிக்கை எடுக்க வேண்டுமென, விவசாயிகள் விரும்புகின்றனர்.

**மின்தடை , பூச்சி தாக்கத்தால் பட்டுக்கூடு உற்பத்தி பாதிப்பு :தொடர் மழையால் மீண்டும் புத்துயிர்**

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில் பெய்யும் பரவலான மழையால் மல்பெரி செடிகள் செழித்து வளருவதால், பட்டு கூடு உற்பத்தி அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் முன்றாயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், 4,700 ஏக்கரில் மல்பெரி பயிரிட்டுள்ளனர். மாதந்தோறும், 1.20 லட்சம் கிலோ பட்டுக்கூடுகள் கர்நாடகாவில் ராம்நகர், தமிழகத்தில் கோவை, தர்மபுரி, சேலம் ஆகிய பகுதிகளுக்கு ஈரோடு மாவட்டத்தில் இருந்து அனுப்பப்படுகிறது. கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், 1,800 ஏக்கரில் மல்பெரி பயிரிடப்பட்டுள்ளது. மாதந்தோறும், 56 ஆயிரம் முதல், 70 ஆயிரம் கிலோ வரை பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்யப்படுகிறது.கோவை மாவட்டம் அன்னூர் பகுதியில் ஏற்பட்ட மாவு பூச்சி தாக்குதல், சத்தி, கோபி உள்ளிட்ட பகுதிகளில் ஏற்பட்டது. பப்பாளி, மரவள்ளி மற்றும் மல்பெரி இழைகளில் ஏற்பட்ட மாவு பூச்சி தாக்குதலால் உற்பத்தி குறைந்தது. குறிப்பாக பட்டுபுழு வளர்ப்புக்கு முக்கிய மூலப்பொருளாக மல்பெரியில் ஏற்பட்ட பூச்சி தாக்குதலால் உற்பத்தி குறைந்தது. மல்பெரி உற்பத்தி குறைவால் பட்டுபுழுக்களை வளர்க்க முடியாமல் விவசாயிகள் திணறினர். மாவு பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது. நடப்பாண்டு பருவமழை பொய்த்ததால், மல்பெரி இலை உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.பட்டு கூடு உற்பத்தி குறைந்ததால், பட்டு நூல் விலை உயர துவங்கியது. 1,800 ரூபாய்க்கு விற்கப்பட்ட பட்டு நூல், 2,400 முதல், 2,600 ரூபாயாக உயர்ந்தது. பட்டு நூல் விலை உயர்வால் கடந்த ஐந்து மாதங்களாக பட்டு கூடு

விலை விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் வகையில் இருந்து வருகிறது. தமிழக மார்கெட்டில் மஞ்சள் கூடுக்கு, 280 ரூபாய் முதல், 303 ரூபாய் வரையிலும், கர்நாடகா மாநிலம் ராம்நகர் மார்க்கெட்டில், 303 முதல், 280 ரூபாய் வரையில் விற்பனையாகிறது.வெள்ளை கூடு தமிழக மார்க்கெட்டில், 300 முதல், 330 வரையிலும், ராம் நகர் மார்க்கெட்டில், 240 முதல், 260 வரைவில் விற்பனையாகிறது.பட்டு கூடு உற்பத்தியாளர்கள் கூறியதாவது:கடந்த இரு ஆண்டாக பட்டு கூடு உற்பத்தியாளர்கள் பல்வேறு பிரச்னையால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவு பூச்சி தாக்குதல், பட்டு கூடு உற்பத்தி செய்ய முடியவில்லை. மாவு பூச்சி கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், நடப்பாண்டு பருவ மழை பொய்த்ததால் இலைகள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. பட்டுப்புழுக்கள் ஒரு குறிப்பிட்ட தட்பவெப்ப நிலையில் வைத்திருக்க வேண்டும். அடிக்கடி ஏற்பட்ட மின்தடை, என பல பிரச்னையால் மேலும் பதித்தது.கோபி சுற்று வட்டாரத்தில் சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. மழையால் மல்பெரி செடிகளுக்கு புத்துயிர் கிடைத்துள்ளதால், இலை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது. இலைகள் அதிகளில் கிடைப்பதால் பட்டுகூடு உற்பத்தியும் அதிகரிக்கும். நடப்பாண்டு பட்டு நூல் விலை நன்றாக உள்ளதால், பட்டுகூடு விலை குறைய வாய்ப்பில்லை.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## தோட்டக்கலை கிராமமாக கடையம் பெரும்பத்து தேர்வு

தென்காசி : கடையம் பெரும்பத்து தோட்டக்கலை கிராமமாக தேர்வு செய்யப்பட்டது.
கடையம் வட்டார தோட்டக்கலை துறை மூலம் தோட்டக்கலை பயிர்கள் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தோட்டக்கலை கிராமம் தேர்வு கூட்டம் வெய்க்காலிப்பட்டியில் நடந்தது. கூட்டத்திற்கு பஞ்.,தலைவர் அருவேல்ராஜ் தலைமை வகித்தார். கடையம் பெரும்பத்து தோட்டக்கலை கிராமமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
கடையம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் டேவிட்ராஜா பியூலா, தென்காசி சிறப்பு தோட்டக்கலை அலுவலர் ஜெயபாரதி மாலதி, கடையம் துணை தோட்டக்கலை அலுவலர் சீதாராமன் தோட்டக்கலை கிராம திட்டங்கள் பற்றி விளக்கினர். கிராம மக்கள் குழு தேர்வு செய்யப்பட்டது. ஏசுவடியான் கோவில் பிள்ளை தலைவராகவும், தர்மராஜ் செயலாளராகவும், குலசேகரபாண்டியன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
ஏற்பாடுகளை உதவி தோட்டக்கலை அலுவலர்கள் அரசமணி, பார்த்திபன் செய்திருந்தனர்.

## வரத்து அதிகரிப்பால் மஞ்சள் விலை சரிவு

ஈரோடு: ஈரோட்டில் மஞ்சள் மண்டிக்கு, இருப்பு வைத்த மஞ்சள் வரத்து அதிகரித்ததால், குவிண்டாலுக்கு, 238 ரூபாய் வரை வீழ்ச்சி அடைந்தது.ஈரோட்டில் அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடம், வெளி மார்க்கெட், ஈரோடு மற்றும் கோபி சொசைட்டி இயங்கி வருகிறது. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய, இரண்டு நாள் மண்டிகளுக்கு வார விடுமுறை அளிக்கப்படுகிறது.கடந்த சில மாதங்களாக மஞ்சள் குவிண்டாலுக்கு, 200 முதல், 500 ரூபாய் வரை ஏற்றம், இறக்கமாகவே

உள்ளது. இதனால் வரத்தும், ஆயிர மூட்டைகளில் இருந்து, கணிசமாக குறைந்து விட்டது. தீபாவளிக்கு பின், விலை அதிகரிக்கும் என வேளாண் விற்பனை குழு மற்றும் விவசாய அமைப்புகள் தெரிவித்து வரும் நிலையில் விவசாயிகள் பலரும் இருப்பு வைத்து வருகின்றனர்.நேற்று முன்தினம், விரலி குவிண்டால் அதிகபட்சம், 5,569 ரூபாய்க்கு விற்றது, 238 ரூபாய் குறைந்து, 5,331 ரூபாய்க்கும், கிழங்கு, 120 ரூபாய் குறைந்து அதிகபட்சம், 5,069 ரூபாய்க்கு விற்க்கப்பட்டது.உள்ளூர் மற்றும் வெளியூர் விவசாயிகள், 490 மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்கு கொண்டுவந்ததில், 250 மூட்டைகள் மட்டுமே விற்பனையானது. விவசாயிகள் பலரும் மண்டிகளில் இருப்பு வைத்து விட்டு திரும்பி சென்றனர்.இந்நிலையில், ஆயுதபூஜை, பக்ரீத் பண்டிகையொட்டி, 23 முதல், 26ம் தேதி வரை உள்ளூர் விடுமுறையும், இரண்டு நாள் வாரவிடுமுறை என ஏழு நாட்கள் மண்டிகளுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. 29ம் தேதி மண்டிகள் துவங்கும் போது, மஞ்சள் வரத்து அதிகரித்து மேலும் விலை குறையுமா? அதிகரிக்குமா? என விவசாயிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

## நெல் குலைநோயை கட்டுப்படுத்த சூடோமோனஸ் பயன்படுத்த வேண்டும்

தென்காசி : "நெல் குலைநோய் மற்றும் இலை உறைக்கருகல் நோயை கட்டுப்படுத்த உயிர் எதிர் கொல்லியான சூடோமோனஸ் பிளோரசன்ஸ் பயன்படுத்த வேண்டும்' என கீழப்பாவூர் உதவி வேளாண்மை இயக்குநர் நல்லமுத்து ராசா விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

""நெல் பயிரில் குலைநோய் மற்றும் இலை உறைக்கருகல் நோயை கட்டுப்படுத்த சிறந்த உயிர் எதிர்கொல்லியாக சூடோமோனஸ் பிளோரசன்ஸ் திகழ்கிறது. சூடோமோனஸ் நுண்ணுயிரியானது விதை மற்றும் மண் வழி பரவும் நோய்களை கட்டுப்படுத்த உதவுகிறது. பயிரில் நோய் எதிர்ப்பு சக்தியை தூண்ட வல்லது. உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா உடன் கலந்து இதனை பயன்படுத்தலாம்.

விதை நேர்த்தியாக, 10 கிரோம் சூடோமோனஸை ஒரு லிட்டர் நீரில் கரைத்து அதில் ஒரு கிலோ விதையை 24 மணி நேரம் ஊற வைத்து விதைக்க வேண்டும். நடவுக்கு முன்பாக ஒரு ஏக்கருக்கான நெல் நாற்றுகளின் வேர்களை ஒரு கிலோ சூடோமோனஸ் கரைசலில் அரை மணி நேரம் ஊற வைத்து நடவு செய்ய வேண்டும். நடவு வயலில் நடவுக்கு பின் 30 நாட்கள் கழித்து ஏக்கருக்கு ஒரு கிலோ என்ற அளவில் சூடோமோனஸ் தேவையான அளவு நன்கு மக்கிய தொழு உரம் அல்லது மணலுடன் கலந்து இட வேண்டும்.

தெளிப்பு முறையில் 0.2 சதவீத சூடோமோனஸ் கரைசலை (அதாவது 1 லிட்டர் நீருக்கு 2 கிராம்) நடவுக்கு பின்னர் 45 நாட்கள் கழித்து நோய்களின் தீவிரத்தை பொறுத்து 10 நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கலாம். சூடோமோனஸ் நுண்ணுயிர்கள் வேளாண் விரிவாக்க மையங்களிலோ, நெல்லை உயிரியில் உற்பத்தி மையங்களிலோ விவசாயிகள் பெற்றுக்

கொள்ளலாம்.

* நெல் விதைகள் தரம் பிரிப்பு

பொதுவாக நெல் விதைகள் உபயோகித்த பேட்டரி செல் போன்று காலப்போக்கில் வீரியம் மற்றும் முளைப்பு திறன் படிப்படியாக குறைந்து விடுகிறது. மேலும் விதையின் எடை சேமிப்பு காலம், இடம், சூழ்நிலை மற்றும் பூச்சி பூஞ்சாணங்களால் மாறுதல் ஏற்படுகிறது. இதனை நிவர்த்தி செய்ய எளிய முறையான உப்பு நீர் கரைசல் பயன்படுத்தி வீரியமுள்ள நெல் விதைகளை பிரித்து எடுக்கலாம்.

உப்பு நீர் கரைசல் தயாரிக்க 10 லிட்டர் நீர், 2 கிலோ உப்பு, நல்ல கோழி முட்டை, கரண்டி போதுமானது. முதலில் முட்டையை 10 லிட்டர் நீரில் போட வேண்டும். நீரை விட அதிக அடர்த்தி உடையதால் முட்டை நீரில் மூழ்கி விடும். அதன் பின் நீரில் சிறிது சிறிதாக உப்பை போட்டு நன்கு கலக்க வேண்டும். 25 பைசா அளவிற்கு முட்டையின் பகுதி நீரின் மேல் பகுதியில் தெரியும் போது தண்ணீரில் உப்பு போடுவதை நிறுத்தி விட வேண்டும்.

இவ்வாறு தயாரித்த உப்புக்கரைசலில் முதலில் 10 கிலோ விதையை சிறிது சிறிதாக போட வேண்டும். மிதக்கின்ற எடை குறைந்த விதைகளை முற்றிலும் நீக்கி விட வேண்டும். மூழ்கிய விதைகளை வெளியே எடுத்து 2 அல்லது 3 முறை நீரில் கழுவி விதையில் படர்ந்த உப்பை அகற்ற வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான எஞ்சியுள்ள 10 கிலோ விதையையும் அதே உப்பு கரைசலில் போட்டு தரம் பிரிக்கலாம்.

தரம் பிரிக்கப்பட்ட நெல் விதைகளை நாற்று விட பயன்படுத்துவதால் நல்ல முளைப்பு திறனும், நடுவதற்கு தேவையான அளவிற்கு வீரியமான நாற்றுகளும் கிடைக்கிறது" என உதவி வேளாண்மை அலுவலர் நல்லமுத்துராசா அறிக்கையில் கூறியுள்ளார்.

## ஆலைகளுக்கு அதிக அளவில் கரும்பு விற்பனை :உருண்டை , அச்சுவெல்லம் விலை உயர்வு

கோபிசெட்டிபாளையம்: ஆயுதபூஜை முன்னிட்டு உருண்டை, அச்சு வெல்லம் கிலோ ஐந்து ரூபாய், நாட்டு சர்க்கரை கிலோ இரண்டு ரூபாய் உயர்ந்துள்ளதால் உற்பத்தியாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., காலிங்கராயன் ஆகிய பாசன பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. பதிவு செய்த கரும்பை தவிர, மற்ற கரும்புகளை, நாட்டு சர்க்கரை, அச்சு வெல்லம், உருண்டை வெல்ல உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகிறது. கோபி சுற்றுப்பகுதியில் அய்யம்பாளையம், ஒத்தகுதிரை, கவுந்தபாடி, முள்ளாம்பரப்பு, அவல்பூந்துறை, ஆப்பக்கூடல், நாதிபாளையம், நாகதேவம்பாளையம் பகுதிகளில் நாட்டு சர்க்கரை, உருண்டை வெல்லம் மற்றும் அச்சு வெல்லம் உற்பத்தி ஆலைகள் அதிகம் உள்ளன.இம்மாவட்டத்தில் அனைத்து பகுதியிலும், கரும்பு அறுவடை துவங்கியுள்ளது. நடப்பாண்டு சர்க்கரை ஆலைகள் கொள்முதல் செய்ய

கரும்புக்கான பணத்தை பட்டுவாடா செய்துள்ளது. இதனால் கரும்பு விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அதிகளவில் அனுப்பி வருகின்றனர். வெல்ல உற்பத்திக்கு தேவையான கரும்பு குறைவாக உள்ளது. தமிழகத்தில் ஆயுதபூஜை, தீபாவளி என தொடர்ச்சியான பண்டிகை நேரத்தில் அச்சு வெல்லம் , உருண்டை வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை தேவையும் அதிகரித்துள்ளது.உற்பத்திசெய்யப்படும் வெல்லம் மற்றும் நாட்டு சர்க்கரை, கவுந்தபாடி மற்றும் சித்தோடு வெல்ல மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. வெல்ல மார்க்கெட்டுக்கு தமிழகத்தின் பிற மாவட்டம் மற்றும் ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற வடமாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் வெல்லம் வாங்கி செல்கின்றனர்.ஆயுத பூஜைக்காக தமிழகம் முழுவதும் வெல்லம் தேவை அதிகரித்துள்ளதாலும், உற்பத்தி குறைவால், வெல்லம் விலை கிலோவுக்கு இரண்டு முதல் ஐந்து ரூபாய் உயர்ந்துள்ளது.வெல்லம் வியாபாரிகள் கூறியதாவது:தமிழகம் முழுவதும் கரும்பு அறுவடை சீஸன் துவங்கி உள்ளது. பெரும்பாலான விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு அனுப்பி வருகின்றனர். வெல்லம் உற்பத்திக்கு தேவையான கரும்பு கிடைக்கவில்லை. ஈரோடு மாவட்டத்தில் சென்ற சில நாட்களாக பரலவாக மழை பெய்து வருவதால் வெல்லம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கவுந்தபாடி, சித்தோடு ஆகிய சந்தைக்கு வாரந்தோறும், 50 ஆயிரம் மூட்டை உருண்டை வெல்லம், 30 ஆயிரம் மூட்டை அச்சு வெல்லம், 10 ஆயிரம் மூட்டை நாட்டு சர்க்கரை வரத்தாகிறது.உற்பத்தி குறைவால் சராசரியாக, 5,000 மூட்டை குறைந்துள்ளது. வெல்லம் வரத்து குறைந்து, தேவை அதிகரிப்பால், அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் கிலோவுக்கு ஐந்து ரூபாய், நாட்டு சர்க்கரை கிலோவுக்கு இரண்டு ரூபாய் உயர்ந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் அச்சு வெல்லம், 30 கிலோ மூட்டை, 900 முதல், 1,200 ரூபாய், உருண்டை வெல்லம், 850 முதல், 1,000 ரூபாய், நாட்டு சர்க்கரை, 1,450 முதல், 1,750 ரூபாய் வரை விற்றன. தற்போதைய நிலவரப்படி அச்சு வெல்லம், 30 கிலோ மூட்டை, 900 முதல், 1,450 ரூபாய், உருண்டை வெல்லம், 900 முதல், 1,250 ரூபாய், நாட்டு சர்க்கரை, 60 கிலோ மூட்டை, 1,500 முதல், 1,950 ரூபாய் வரை விற்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்டா மாவட்டங்களில் பெய்த மழையளவு விபரம்

தஞ்சாவூர்: திருவாரூர், தஞ்சை, நாகை ஆகிய டெல்டா மாவட்டங்களில் நேற்றுக்காலை, 8 மணி வரை விடிய, விடிய கனமழையும், தூறல்மழையும் பெய்தது.

டெல்டா மாவட்டங்களில் பதிவான மழையளவு விபரம் வருமாறு:

திருவாரூர் மாவட்டம், திருவாரூரில், 108 மி.மீ., குடவாசல், 85.60 மி.மீ., மன்னார்குடி, 94 மி.மீ., முத்துப்பேட்டை, 64.20 மி.மீ., நன்னிலம், 120.40 மி.மீ., நீடாமங்கலம், 96.20 மி.மீ., திருத்துறைப்பூண்டி, 96.80 மி.மீ., வலங்கைமான், 89.20 மி.மீ., அளவு மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் மொத்த மழையளவு, 876.40 மி.மீ., சராசரி, 97.38 மி.மீ., ஆகும்.

நாகை மாவட்டத்தில் நேற்றுக்காலை வரை, தலைஞாயிறு, 106.6 மி.மீ., மயிலாடுதுறை, 64.4 மி.மீ., நாகை, 81.5 மி.மீ., வேதாரண்யம், 89.2 மி.மீ., சீர்காழி, 77.8 மி.மீ., தரங்கம்பாடி, 84 மி.மீ., திருபூண்டி, 69 மி.மீ., மணல்மேடு, 79.4 மி.மீ., கொள்ளிடம், 93 மி.மீ., அளவு மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் மொத்த மழையளவாக, 744.9 மி.மீ., பதிவாகியுள்ளது.

தஞ்சை மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல், நேற்று காலை வரை, விடிய, விடிய மழை பெய்தது.

சில நேரங்களில் கனமழையும், தூறல் மழையும் பெய்தது. விடிந்தபின் காலை, 10 மணி வரை, தூறல் மழை பெய்ததாலும், நேற்று விஜயதசமியையொட்டி விடுமுறை தினம் என்பதாலும், வீட்டுக்குள்ளேயே மக்கள் மழைக்கு பயந்து, முடங்கி கிடந்தனர்.

சாலைகளில் வாகன நடமாட்டமும், நெரிசலும் குறைவாகவே இருந்தது.

மாவட்டத்தில், பல்வேறு பகுதிகளில் நேற்றுக்காலை வரை பெய்த மழையால், விவசாயிகள் சம்பா சாகுபடி முன்னேற்பாடு பணியை மும்முரமாக துவங்கியுள்ளனர். தஞ்சை மாவட்டத்தில், கல்லணை-45 மி.மீ., திருவையாறு-60.2 மி.மீ., தஞ்சாவூர்-72 மி.மீ., கும்பகோணம்-99 மி.மீ., பாபநாசம்-98 மி.மீ., பூதலூர்-76.4 மி.மீ., பேராவூரணி -135.4 மி.மீ., பட்டுக்கோட்டை 68-மி.மீ., மயிலாடுதுறை-64.4 மி.மீ., அளவு மழை பதிவாகியுள்ளது.

## கூடுதல் விலைக்கு உரம் விற்றால்நடவடிக்கை : கலெக்டர் ஹரிஹரன்

விருதுநகர்:"" விருதுநகர் மாவட்டத்தில் யூரியா மற்றும் உரங்கள் அதிக விலைக்கு விற்றால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்," என, கலெக்டர் ஹரிஹரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் கூறியதாவது: மாவட்டத்தில் உள்ள உர விற்பனையாளர்கள் ,உர மூடையில் குறிப்பிடப்பட்டுள்ள விலையில் மட்டுமே, விற்பனை செய்ய வேண்டும். யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், காம்ளக்ஸ் போன்ற உரங்களை, முறையாக பில் போட்டு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். பில்லில் முழு முகவரி முற்றும் விவசாயியின் கையெழுத்து கண்டிப்பாக இருக்க வேண்டும். மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்த உரங்களை, வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல கூடாது. மீறும் உர விற்பனையாளர்கள் மீது உரக்கட்டுப்பாட்டு சட்டம் 1985 பிரிவு 3,4,5 மற்றும் 19(ஏ) ன்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். காலவதியான

பூச்சி மருந்துகளை விற்பனை செய்யக்கூடாது. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பூச்சி மருந்துகளை மட்டுமே இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும், என்றார்

## நிரம்பாத அணைகள் : கவலையில் விவசாயிகள்

விருதுநகர்:விருதுநகர் மாவட்டத்தில் மழை பெய்தும் , அணைகள், கண்மாய்கள் நிறையாத நிலையில்,விவசாயிகள் கவலையில் உள்ளனர். மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தநிலையில், ஆறு, ஓடைகளில் நீர் ஊற்றுக்கள் தோன்றி, அணைக்கு நீர் வரத்து இருந்தது. ஆனால் மழை தீவிரமாகாமல் படிப்படியாக குறைந்தது. அணைகள், கண்மாய்கள் நிறையாத நிலையில்,

மழையும் முற்றிலும் நின்றதால், விவசாயிகள் பயிர் செய்ய முடியாது, இரு தலை கொள்ளி எறும்பாக திணறி வருகின்றனர்.விருதுநகரில் நேற்று முன் தினம் காலை 6 முதல் நேற்று காலை 6 மணி வரை, ராஜபாளையம் 7, ஸ்ரீவில்லிபுத்தூர் 5.4,வத்திராயிருப்பு 3, பிளவக்கல் (பெரியாறு) 3.02,சிவகாசி 4.60,வெம்பக்கோட்டை 5.5, சாத்தூர் 7,விருதுநகர் 5,அருப்புக்கோட்டை 6, கோவிலாங்குளம் 7.20, காரியாபட்டி 9.6, திருச்சுழி 6.1 மி,மீ., என , மழை பெய்துள்ளது. மழையால் பிளவக்கல் பெரியாறு 83.81, கோவிலாறு 18.65, வெம்பக்கோட்டை 12.74 , ஆனைக்குட்டம் 21.18 , குல்லூர் சந்தை 49.88 , இருக்கன்குடி 7.87 மில்லியன் கனஅடி நீர்தான், அணைகளில் இருப்பு உள்ளது. கோல்வார்பட்டி அணையில் சுத்தமாக நீர் இல்லை.தற்போது, பிளவக்கல் பெரியாறு 43.99, கோவிலாறு 10.01,குல்லூர் சந்தை 17.60 கனஅடி நீர் உள் வரத்து உள்ளது. மற்ற அணைகளுக்கு நீர் வரத்து இல்லை.இந்த நீர் நாற்று நடவுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. இதை நம்பி நெல் பயிரிட முடியாது. மீண்டும் கன மழை பெய்து, அணைகளுக்கு நீர் வரத்து இருந்தால் மட்டுமே, நெல் பயிர் உற்பத்திசெய்ய முடியும். விருதுநகர் மாவட்ட விவசாயிகளோ,மழை பெய்தும் பயனில்லாமல் போய்விட்டதே, என்ற கவலையில் உள்ளனர்.

## கோமுகி அணை நிரம்பியது 500 கன அடி நீர் வெளியேற்றம்

கச்சிராயபாளையம்:கோமுகி அணை நிரம்பியதால் பாதுகாப்பு கருதி விநாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.வடகிழக்கு பருவ மழையால் விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி கல்வராயன்மலை அடிவாரத்தில் உள்ள கோமுகி அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதனால் அணை நிரம்பி வருகிறது.கோமுகி அணையின் மொத்த கொள்ளளவான 46 அடியில் (560 மில்லியன் கன அடி) தற்போது 44(490 மில்லியன் கன அடி) தண்ணீர் நிரம்பியுள்ளது.அணையில் 44 அடி மட்டுமே தண்ணீர் இருப்பு வைக்க முடியும் என்பதால், அணையின் பாதுகாப்பு கருதி மெயின் ஷெட்டர்கள் மூலம் நேற்று காலை 7 மணி முதல் விநாடிக்கு 500 கன அடி வீதம் கோமுகி ஆறு வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.பாசனத்திற்கு திறப்பு:கோமுகி அணை நிரம்பி வரும் நிலையில் விவசாய பாசனத்திற்காக இன்று (25ம் தேதி) தலைப்பு மதகு வழியாக தண்ணீர் திறந்து விடப்படுகிறது. ஊரக தொழில்துறை அமைச்சர் மோகன் திறந்து வைக்கிறார். நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.,க்கள் குமரகுரு, அழகுவேலுபாபு, கலெக்டர்சம்பத் மற்றும் பொதுப் பணித்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.அணை திறப்பதன் மூலம் 5,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறுகின்றன.

## விழுப்புரம் மாவட்டத்தில் தொடர் மழை அணைகளில் நீர் மட்டம் உயர்வு

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் அணைகளில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.விழுப்புரம் மாவட்டத்தில், பருவ மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

இதனால் அணைகள்,ஏரிகள், குளங்களில் தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது.நேற்று காலை 7.30 மணி நிலவரத்தின் படி, வீடூர் அணையில் 32 அடி கொள்ளளவிற்கு, தற்போது 19.2 அடி தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இதே போல் கோமுகி அணையில் 46 அடிக்கு, 42.8 அடியும், மணிமுத்தா அணையில் 36 அடிக்கு, 22.8 அடியும் தண்ணீர் மட்டம் உயர்ந்துள்ளது. சாத்தனூர் அணையில் 119 அடிக்கு, 79 அடி தண்ணீர் உயர்ந்துள்ளது.நேற்று காலை வரை மாவட்டத்தில் பெய்துள்ள மழை அளவு விபரம்: விழுப்புரத்தில் 40 மில்லி மீட்டரும், வானூரில் 34 மி.மீ., திண்டிவனத்தில் 43 மி.மீ., செஞ்சியில் 14 மி.மீ., திருக்கோவிலூரில் 85 மில்லி மீட்டரும் மழையளவு பதிவானது.உளுந்தூர்பேட்டை 74 மில்லி மீட்டரும், கள்ளக்குறிச்சியில் 38 மி.மீ., சங்கராபுரத்தில் 70 மி.மீ., மரக்காணத்தில் 40 மில்லி மீட்டர் அளவும் மழை பெய்துள்ளது.

**பூக்கள் சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் : குறைந்த செலவில் கூடுதல் வருமானம்**

மோகனூர்: குறைந்த செலவில், அதிக லாபம் கிடைப்பதால், பூ சாகுபடி செய்ய, விவசாயிகள் விரும்புகின்றனர்.மோகனூர் யூனியன், சின்னபெத்தாம்பட்டியை சேர்ந்த விவசாயி செல்லமுத்து. அவர், இரண்டு ஏக்கர் பரப்பளவில், சாமந்தி, ரோஜா, சம்மங்கி, கோழிக்கொண்டை பூ, குண்டு மல்லி போன்ற பூக்களை சாகுபடி செய்து வருகிறார். திருவிழா, திருமணம் போன்ற விசேஷ நாட்களில், பூக்களின் விலை உச்சத்தை தொடும்.சாதாரண நாட்களில், வரத்து பொருத்து, அதன் விலை இருக்கும். தற்போது, ஆயுதபூஜை, சரஸ்வதி பூஜை முடிந்துள்ள நிலையில், பூக்களை சாகுபடி செய்த விவசாயிகள், கணிசமான வருமானத்தை ஈட்டி உள்ளனர். அடுத்து, தீபாவளிக்கு பூக்களின் விலை உயரும்.இதற்கிடையில், பூக்களின் பயன்பாடு குறைந்தே காணப்படும். தற்போது, பூக்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், கூடுதல் வருமானம் பெற்று, மகிழ்ச்சியில் உள்ளனர். தற்போது, சாமந்தி பூ ஒரு கிலோ, 40 ரூபாய், பன்னீர் ரோஜா ஒரு பூ, 30 காசு, கோழிக்கொண்டை பூ ஒரு கட்டு பத்து முதல், 15 ரூபாய், சம்மங்கி ஒரு கிலோ, 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.இது குறித்து விவசாயி செல்லமுத்து கூறியதாவது:இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக, பூ சாகுபடி செய்து வருகிறேன். இங்கு சாமந்தி, பன்னீர் ரோஜா, சம்மங்கி, கோழிக்கொண்டை பூ, குண்டு மல்லி ஆகிய பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. சாமந்தி பூ, ஒரு நாள் விட்டு ஒரு நாளும், பன்னீர் ரோஜா, தினமும் அறுவடை செய்து, நாமக்கல் கொண்டு செல்லப்படுகிறது.திருவிழா, திருமணம் போன்ற விசேஷ நாட்களில், பூக்களின் விலை அதிகரிக்கும். மற்ற நாட்களில், பூக்களின் வரத்துக்கேற்ப விலை இருக்கும். பன்னீர் ரோஜா தினமும், 800 முதல், 1,000 வரை அறுவடை செய்யப்படுகிறது. அதன் மூலம் நல்ல வருமானம் கிடைத்து வருகிறது.அதேபோல், மற்ற பூக்களிலும், கணிசமான வருவாய் கிடைப்பதால், பூ சாகுபடி தொழிலில் ஈடுபட்டு வருகிறேன்.இவ்வாறு அவர் கூறினார்.

**அக்.,30ல் மீன் வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி**

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 30ம் தேதி, பொதுநீர் நிலைகளில் கெண்டை மீன் வளர்ப்பு சம்மந்தமான இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:கெண்டை மீன் பயிற்சியில், கெண்டை மீன் வளர்ப்பு இனம் எவை, எவ்வாறு இடம் தேர்வு செய்தல், மீன் வளர்ப்பில் தீவன மேலாண்மை, நோய் மேலாண்மை, பொருளாதாரம் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.விவசாயிகள் உட்பட அனைத்து தரப்பினரும் பயிற்சியில் பங்கேற்கலாம். பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளோர், வரும், 29ம் தேதிக்குள், கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் அல்லது, 04286 - 266244, 266345 ஆகிய ஃபோன் எண்களில் தொடர்பு கொண்டு பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

25.10.2012 A.M

## தொடர்மழையால் விவசாய பணிகள் மும்முரம்

பாலக்கோடு, : தொடர் மழை காரணமாக தர்மபுரி மாவட்டத்தில் விவசாய பணிகள் தீவிரமடைந்து வருகின்றன.

தமிழகத்தில் கடந்த ஒரு வாரமாக வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது. தர்மபுரி மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்து வருகிறது. தர்மபுரி, பாலக்கோடு, பென்னாகரம் என மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு மழை பெய்து வருவதால் நீர் நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் கட்டுமானம், செங்கல் உற்பத்தி உள்ளிட்ட தொழிகள் முடங்கியுள்ளன. இருப்பினும் தென்மேற்கு பருவமழை பொய்த்ததால், ஏமாற்றம் அடைந்த நிலையில், வடகிழக்கு பருவமழை தற்போது கருணை காட்டி வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதனால் தர்மபுரி மாவட்டத்தில் விவசாய பணிகள் மும்முரமடைந்துள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவும் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. நேற்று காலை முதலே வானம் மேகமூட்டமாக இருந்தது. அவ்வப்போது சாரல் மழை பெய்தது. நேற்று முன்தினம் அதிகபட்சமாக அரூரில் 49 மிமீ. மழை பதிவானது. மாவட்டத்தின் இதர பகுதிகளில் பெய்த மழையின் அளவு வருமாறு :

பாலக்கோடு- 9 மிமீ, பாப்பாரப்பட்டி -25மிமீ, பென்னாகரம் -33மிமீ, தர்மபுரி- 24மிமீ, அரூர்- 49மிமீ, ஒகேனக்கல்- 28மிமீ, பாரிப்பிரெட்டிப்பட்டி- 25மிமீ, தர்மபுரி ஆட்சியர் அலுவலகம்- 24மிமீ, வாணியாறு- 30மிமீ, தொப்பையாறு -13.2மிமீ, நாகாவதி-24மிமீ, தும்பலஹள்ளி-10மிமீ, வரட்டாறு-20மிமீ.

## ரூ126.37 கோடி வளர்ச்சி பணிகள் வேளாண் விற்பனை இயக்குநர் ஆய்வு

ஈரோடு, : ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின்கீழ் மாவட்டத்தில் 126.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை வேளாண் விற்பனை, வணிகத்துறை இயக்குர் அனில்மிஸ்ராம் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே கருமாண்டிசெல்லிபாளையம் சிலேட்டர்புரத்தில் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு வளர்ச்சி நிதி திட்டத்தின்கீழ் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மஞ்சள் சேமிப்பு, இருப்பு கிடங்கின் கட்டுமான பணிகளை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநரும், தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியத்தின் முதன்மை செயல் அலுவலருமான அனில்மிஸ்ராம் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கட்டுமான பணிகளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். பின்னர் அருகில் இருந்த மஞ்சள் இருப்பு குடோனில் விவசாயிகள் இருப்பு வைத்துள்ள மஞ்சள் மூட்டைகள் குறித்து ஆய்வு செய்தார்.
விவசாயிகளுக்கு மஞ்சள் மூட்டைகளின் பேரில் வழங்கப்பட்டு வரும் பொருளீட்டு கடன்கள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த கிடங்கில் 31 விவசாயிகள் 1,745 குவிண்டால் இருப்பு வைத்துள்ளதாகவும், 12 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பொருளீட்டு கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் 37 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டு வரும் வேளாண் விளை பொருட்கள் சுத்தம் செய்து தரம் பிரிக்கும் மையத்தினையும் பார்வையிட்டார்.
பெருந்துறை சிப்காட் வளாகத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 48 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ள குளிரூட்டப்பட்ட வேளாண் விளை பொருள் முனையத்தினை பார்வையிட்டார். ஒவ்வொரு கட்டடிங்களும் தனித்தனியாக அமைக்கப்படவுள்ள இடத்தினையும், அதற்கான வரைபடத்தினையும் பார்வையிட்டு வரைபடத்திலும், முன்மொழிவிலும் வகுக்கப்பட்டுள்ள நிதிமுறைகளுக்கு ஏற்றவாறு அனைத்து பணிகளையும் விரைவாக தொடங்கிட வேண்டும் என்று அனில்மிஸ்ராம் உத்தரவிட்டார்.
அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் டிஜிட்டல் முறையில் வைக்கப்பட்டிருந்த வேளாண் விளைபொருட்களின் இன்றைய நிலவரம் குறித்த விளம்பரபலகையினை பார்வையிட்டார். ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கொப்பரை தேங்காய் மற்றும் வேளாண் விளை பொருட்கள் சேமிப்பு, இருப்பு கிடங்கினை பார்வையிட்டார்.
பின்னர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகள் கொண்டு வந்திருந்த கொப்பரை தேங்காய் மூட்டைகளை ஆய்வு செய்தார். விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது கலெக்டர் சண்முகம், தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரிய துணை செயலாளர் இராமசாமி, தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரிய செயற்பொறியாளர் ஜவஹர், இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, ஈரோடு வேளாண் விற்பனைக்குழு பரமசிவம், வேளாண் விற்பனைக்குழு செயலாளர் முருகானந்தம், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சுகுமார், பெருந்துறை தாசில்தார் ஜான்சிராணி, செய்திமக்கள் தொடர்பு அலுவலர் சௌந்திரபாண்டியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பவானிசாகர் அணையில் இருந்து உயிர் தண்ணீர் திடீர் திறப்பு**

ஈரோடு, : நீலகிரி மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் கனமழை காரணமாக பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக இரண்டாம் மண்டலத்துக்கு உயிர் தண்ணீர் நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளது.

105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கடும் வறட்சி நிலவி வந்ததால் கடந்த ஆகஸ்ட் 15ம் தேதி நன்செய் சாகுபடிக்காக கீழ்பவானி (எல்பீபி.,) வாய்க்காலில் திறக்க வேண்டிய தண்ணீர் திறப்பு தள்ளி போனது. நீர்வரத்து அதலபாதாளத்துக்கு சென்றதால் நடப்பாண்டில் நன்செய் சாகுபடிக்குட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கரிலும் பாசனம் கடும் பாதிப்படைந்துள்ளது. வழக்கமாக நன்செய் சாகுபடிக்கு திறக்கப்படும் 24 டிஎம்சி., நீர்திறப்பை பயன்படுத்தி சுமார் 70 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்வது இந்த ஆண்டு முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே நீண்ட காலப்பயிர்களான தென்னை, வாழை, கரும்பு பயிர்களை காப்பாற்ற கடந்த செப்டம்பர் 17ம் தேதி முதல் 15 நாட்களுக்கு முதலாம் மண்டலத்துக்கு உட்பட்ட ஒரு லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கும் உயிர் தண்ணீர் திறக்கப்பட்டது.

அக்டோபர் 2ம் தேதி வரை முதலாம் மண்டலத்துக்கு உயிர் தண்ணீர் திறக்கப்பட்டது. ஒரு வாரம் இடைவெளி விட்டு மீதமுள்ள இரண்டாம் மண்டலத்துக்கு உட்பட்ட 1 லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களுக்கும் உயிர் தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 27 அடியாக குறைந்து போனதால் உயிர் தண்ணீர் திறப்பு தேதி தள்ளி போனது. இந்நிலையில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்திலும், கேரள மாநிலத்திலும் பெய்து வரும் கனமழை காரணமாக பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. கடந்த 22ம் தேதி காலை 49 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் கடந்த 2

நாட்களில் 7 அடி வரை உயர்ந்து நேற்று காலை 55.65 அடியாக காணப்பட்டது.


அணையில் மொத்தம் 6 டிஎம்சி., நீர்இருப்பு இருந்ததால் திடீரென நேற்று காலை 10 மணியளவில் கீழ்பவானி வாய்க்காலில் இரண்டாம் மண்டலத்துக்காக உயிர் தண்ணீர் திறக்கப்பட்டது. விவசாயிகளுக்கு எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரண்டாம் மண்டலத்துக்கு உயிர் தண்ணீர் திறக்கப்பட்டதால் விவசாயிகளை அதிர்ச்சியடைய செய்தது. இருப்பினும், உயிர் தண்ணீர் திறப்பால் விவசாயப்பணியில் கவனம் செலுத்த துவங்கியுள்ளனர். பொதுப்பணித்துறையினர் கூறுகையில்:

கீழ்பவானி பாசனத்துக்குட்பட்ட இரண்டாம் மண்டலத்துக்கு கடந்த 9 அல்லது 10ம் தேதி முதல் உயிர் தண்ணீர் திறந்திருக்க வேண்டும்.

அணையில் போதிய நீர்இருப்பு இல்லாததால் உயிர் தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது போதிய நீர்இருப்பு உள்ளதால் 22ம் தேதி காலை 10 மணி முதல் உயிர் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. துவக்கத்தில் வெறும் 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு, படிப்படியாக தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்படும்.

தற்போது அணையில் 6 டிஎம்சி., நீர்இருப்பு உள்ளதால் உயிர் தண்ணீர் தொடர்ந்து வழங்குவதில் சிரமம் இருக்காது. அடுத்த கட்டமாக நன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டுமானால் அணையின் நீர்மட்டம் குறைந்தபட்சம் 80 அடியாவது இருக்க வேண்டும். அப்போது தான் நன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு குறித்து முடிவு செய்ய இயலும். இவ்வாறு பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

**பெரியாறு , வைகை , மஞ்சளாறு அணைகளின் நீர்மட்டம் கிடுகிடு**



பெரியகுளம் : தமிழகம் முழுவதும் பெய்து வரும் கனமழையால் அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்னர்.

சோத்துப்பாறை அணை: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள சோத்துப்பாறை அணையின் மொத்த உயரம் 126 அடியாகும். 123 அடியாக நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அணையில் 94.65 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. வினாடிக்கு 59 கனஅடி தண்ணீர்வரத்து உள்ளது. அணையிலிருந்து பெரியகுளம் மக்களுக்கு குடிநீருக்காக மட்டும் 3 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இன்று அணை நிரம்பிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மஞ்சளாறு அணை: மஞ்சளாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கொடைக்கனால் மலையடிவாரத்தில் அமைந்துள்ள இந்த அணையின் மொத்த உயரம் 57 அடியாகும். அணையில் தற்போது 47.10 அடி (289 மில்லியன் கன அடி) தண்ணீர் உள்ளது. வினாடிக்கு 96 கன அடி தண்ணீர்வரத்து உள்ளது. அணையிலிருந்து பாசனத்திற்காக 2 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பெரியாறு அணை: பெரியாறு அணையின் நீர் மட்டம் 123.70 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு ஆயிரத்து 686 கனஅடி தண்ணீர் வருகிறது. அணையிலிருந்து வினாடிக்கு ஆயிரத்து 372 கன அடி நீர் வெளியேறுகிறது.

வைகை அணை: வைகை அணையின் நீர் மட்டம் 49.8 அடியாக உள்ளது. வினாடிக்கு ஆயிரத்து 981 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையிலிருந்து மதுரை குடிநீருக்காக 60 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அமராவதி, திருமூர்த்தி அணைகள்: 90 அடி உயரம் கொண்ட அமராவதி அணையில் நேற்று காலை நீர்மட்டம் 59 அடியாக உயர்ந்தது. 612 கனஅடி நீர் வந்தது. வெளியேற்றம் இல்லை. திருமூர்த்தி அணைக்கு 800 கனஅடி நீர் வந்தது.

நீர்மட்டம் 58 அடியாக உயர்ந்தது. அணை நிரம்ப இன்னும் 2 அடிகளே தேவை. பிஏபி பாசனத்துக்காக பிரதான கால்வாயில் 926 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

முக்கடல் அணை: நாகர்கோவில் நகர பகுதிக்கு குடிநீர் வழங்கி வரும் முக்கடல் அணை நீர்மட்டம் மைனஸ் மட்டத்தில் இருந்த நிலையில், நீர்வரத்து அதிகரிப்பால் படிப்படியாக உயர்ந்து 7.10 அடியை எட்டியது.

பேச்சிப்பாறை அணை 11.50 அடி, பெருஞ்சாணி 31.20 அடி, சிற்றார்,1ல் 5.15 அடி, சிற்றார்,2ல் 5.25 அடி, பொய்கையில் 8.70 அடி, மாம்பழத்துறையாறில் 49.21 அடியாக நீர்மட்டம் உள்ளது. நிரம்பியது குண்டாறு அணை: பாபநாசம் அணை நீர்மட்டம் நேற்று 4 அடி உயர்ந்து 58.05 அடியானது. விநாடிக்கு 2011.34 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தொடர் மழை காரணமாக அணை மூடப்பட்டுள்ளது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 74.61 அடியாக உள்ளது. மணிமுத்தாறு அணையில் 52.70 அடியாக இருந்த நீர்மட்டம் மேலும் இரண்டு அடி உயர்ந்து 54.65 அடியானது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 69 அடியாக உள்ளது. குண்டாறு அணையின் நீர்மட்டம் முழுகொள்ளளவை எட்டி 36.10 அடியை தொட்டது.

மேட்டூரில் இருந்து நீர்திறப்பு நிறுத்தம்

காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்த மழை காரணமாக பாசனத்துக்கான நீரின் தேவை குறைந்துள்ளது. இதனால், மேட்டூர் அணை திறப்பு விநாடிக்கு ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் நீர் திறப்பு முற்றிலும் நிறுத்தப்பட்டது. நேற்று மாலை நிலவரப்படி, மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 3425 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர்மட்டம் 64.43 அடியாக இருந்தது. நீர் இருப்பு 28.09 டிஎம்சி.

DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

25.10.2012 A.M

**தி டுக்கல்லில் தொடர் மழை காரணமாக**
**மார்க்கெட்டில் காய்கறிகள் வரத்து குறைந்தது; விலை உயர்வு**

தி டுக்கல்லில் தொடர் மழை காரணமாக மார்க்கெட்டிற்கு காய்கறிகள் வரத்து குறைந்ததால் விலை கிடுகிடுவென உயர்ந்தது.

காய்கறிகள் வரத்து குறைவு

தமிழகம் முழுவதும் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. தி டுக்கல் மாவட்டத்தில் தொடர் மழையால் அணைகள், குளங்கள் மற்றும் ஏரிகள் நிறைந்து வருகின்றன. இந்த மழை காரணமாக தி டுக்கல் காந்திமார்க்கெட்டிற்கு மேட்டு பாளையம், பெரியகுளம், வத்தலக்கு டு, வெள்ளோடு, சிறுமலை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து வரும் காய்கறிகளின் வரத்து குறைந்தது.

இதனால் காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்து இருக்கிறது. மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

கடந்த சில தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.20–க்கு விற்ற கத்தரிக்காய் ரூ.28–க்கும், வெ டைக்காய் கிலோ ரூ.20, நாட்டு தக்காளி கிலோ ரூ.20, ஒட்டு தக்காளி கிலோ ரூ.15, கிலோ ரூ.30–க்கு விற்ற பீன்ஸ் ரூ.40–க்கும் விற்பனை ஆனது.

சின்னவெங்காயம்

கிலோ ரூ.18–க்கு விற்ற கேரட் ரூ.28–க்கும், கிலோ ரூ.24–க்கு விற்ற உருளைகிழங்கு ரூ.28–க்கும், கிலோ ரூ.28–க்கு விற்ற சின்னவெங்காயம் ரூ.40–க்கும் அதிகரித்துள்ளது. பெரிய வெங்காயம் கிலோ ரூ.20, முள்ளங்கி கிலோ ரூ.20, பாகற்காய் (பெரியது) கிலோ ரூ.40, பாகற்காய் (சிறியது) கிலோ ரூ.80, முட்டைகோஸ் கிலோ ரூ.16–க்கும் விற்பனை செய்ய பட்டது.

முருங்கைக்காய் கிலோ ரூ.35, சவ்சவ் கிலோ ரூ.20, புடலங்காய் கிலோ ரூ.20, கருணைக்கிழங்கு கிலோ ரூ.30, டர்னி கிலோ ரூ.20, பீட்ருட் கிலோ ரூ.15, சேனைக்கிழங்கு கிலோ ரூ.35, கல்லா மாங்காய் கிலோ ரூ.70–க்கும் விற்றது. இதே போல் கிலோ ரூ.40–க்கு விற்ற சோயா பீன்ஸ் ரூ.80–க்கும், கிலோ ரூ.60–க்கு விற்ற பட்டர்பீன்ஸ் ரூ.100–க்கும் உயர்ந்தது.

வாழை இலை விலை

பச்சைமிளகாய் கிலோ ரூ.40, இஞ்சி கிலோ ரூ.60, கொத்தமல்லி கட்டு ரூ.20, கருவே பிலை கட்டு ரூ.20, புதினா கட்டு ரூ.12 விற்பனை ஆகியது. மேலும் தொடர் மழை காரணமாக வாழை இலை

வரத்து குறைந்தது.

இதனால் கடந்த சில தினங்களாக விலை உயர்ந்து கொ டே இருக்கிறது. 400 இலை கொ ட பெரிய அடுக்கு ரூ.450–க்கும், 250 இலை கொ ட சிறிய அடுக்கு ரூ.370–க்கும் விற்றது.

இதுகுறித்து காய்கறி வியாபாரி ரெங்கராஜ் என்பவரிடம் கேட்ட போது, 'மழையால் காய்கறிகள் வரத்து இல்லை. மேலும் மலை பகுதியில் இருந்து வரும் காய்கறிகள் வரத்து குறைந்து இரு பதால் விலை உயர்ந்து வருகிறது. மழை இன்னும் தொடர்ந்து பெய்தால் காய்கறிகள் விலை மீ டும் உயரும். கடந்த சில தினங்களுக்கு முன்பு முகூர்த்த நாட்கள் தொடங்கியதால் வாழை இலை விலை ஏறியது. பின்னர் மழை காரணமாக வரத்து இல்லாததால் விலை ஏறிக்கொ டே இருக்கிறது' என்றார்.

**பவானிசாகர் அணையில் இருந்து**
**கீழ்பவானி வாய்க்காலில் 1,500 கன அடி த ணீர் திற பு**

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு 1,500 கன அடி த ணீர் திறக்க பட்டுள்ளது.

உயிர் த ணீர்

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய ர் ஆதாரமாக விளங்கும் பவானிசாகர் அணைக்கு போதிய த ணீர் வராததால் கடந்த அக்டோபர் 9–ந் தேதி அணையின் ர் மட்டம் 26 அடியாக குறைந்தது. இதனால் அணையில் இருந்து பாசனத்திற்கு த ணீர் திறந்து விடுவது நிறுத்த பட் டது. மேலும் போதிய மழை இல்லாததால் பாசன பகுதிகள் வறட்சி அடைந்தது. எனவே பாசன பகுதிகளுக்கு உயிர் த ணீர் திறந்து விட வே டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

த ணீர் திற பு

இந்த கோரிக்கையை ஏற்று பவானிசாகர் அணையில் இருந்து நேற்று கீழ்பவானி வாய்க்காலில் காலை 10 மணிக்கு வினாடிக்கு 500 கன அடி த ணீர் திறந்து விட பட்டது. இந்த த ணீர் மதியம் 2 மணிக்கு வினாடிக்கு 1,000 கன அடியாகவும், மாலை 6 மணிக்கு வினாடிக்கு 1,500 கன அடியாகவும் உயர்த்த பட்டது.

இந்த த ணீர் மொத்தம் 15 நாட்கள் திறந்து விட படலாம் என்று எதிர்பார்க்க படுகிறது.

நேற்று மாலை 5 மணி நிலவர படி அணையின் ர்மட்டம் 55.91 அடியாக இருந்தது. அணைக்கு வரத்து வினாடிக்கு 2 ஆயிரத்து 659 கன அடியாக இருந்தது.

**கருமா டிசெல்லிபாளையத்தில் புதிதாக கட்ட பட்டுவரும்**
**மஞ்சள் கிடங்கை வேளா மை அதிகாரி நேரில் ஆய்வு செய்தார்**
**பணியை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவு**

ஈரோடு மாவட்டம் கருமா டிசெல்லிபாளையத்தில் புதிதாக கட்ட பட்டு வரும் மஞ்சள் கிடங்கை மாநில வேளா மை முதன்மை செயல் அதிகாரி நேரில் பார்வையிட்டு கட்டிட பணியை விரைந்து முடிக்க சம்பந்த பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மஞ்சள் சேமி பு கிடங்கு

ஈரோடு மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் சார்பில் பெருந்துறை அருகே உள்ள கருமா டிசெல்லிபாளையம் சிலேட்டர்புரத்தில் ரூ.5 கோடி மதி பில் மஞ்சள் சேமி பு இரு பு கிடங்கு மற்றும் வேளா விளைபொருட்களை சுத்தம் செய்து தரம் பிரிக்கும் மையம் கட்ட பட்டு வருகிறது.

அதுமட்டுமின்றி பெருந்துறை சி காட் வளாகத்தில் புதிதாக வேளா விற்பனை மையமும், அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கொ பரை தேங்காய் மற்றும் வேளா உற்பத்தி பொருட்கள் ஏல மையம் மற்றும் இரு பு கிடங்கும் புதிதாக கட்ட படுகிறது.

கருமா டிசெல்லிபாளையத்தில் கட்ட பட்டு வரும் கட்டிட பணியை சென்னை வேளா விற்பனை மற்றும் வேளா வணிகத்துறை இயக்குநரும், தமிழ்நாடு வேளா விற்பனை வாரியத்தின் முதன்மை செயல் அதிகாரி மான அனில் மிஸ்ராம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அ போது அவர், பணிகளை நிர்ணயிக்க பட்ட காலத்திற்குள் தரமாக முடித்திட வே டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பொருளீட்டுக்கடன்

இதைத்தொடர்ந்து அருகில் உள்ள மஞ்சள் இரு பு கிடங்கில் விவசாயிகள் இரு பு வைத்துள்ள மஞ்சள் மூட்டைகளை ஆய்வு செய்தார். விவசாயிகளுக்கு மஞ்சள் மூட்டைகளின் பேரில் வழங்க பட்டுவரும் பொருளீட்டு கடன்கள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும் விவசாயிகளுக்கு முறையாக தேவையான பொருளீட்டு கடனுதவி வழங்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வே டும் என்றும் அதிகாரிகளுக்கு முதன்மை செயல் அதிகாரி அனில் மிஸ்ராம் உத்தரவிட்டார்.

பின்னர் தேசிய வேளா வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.37 லட்சம் மதி பீட்டில் புதிதாக கட்ட பட்டு வரும் விவசாய விளைபொருட்கள் சுத்தம் செய்து தரம் பிரிக்கும் புதிய மையத்தை ம், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ரூ.120 கோடி

பெருந்துறை சி காட் வளாகத்தில் ரூ.120 கோடி மதி பீட்டில் 48 ஏக்கர் பர பளவில் புதிதாக அமைக்க படவுள்ள குளிரூட்ட பட்ட விவசாய விளைபொருட்கள் மையத்தை ம் முதன்மை செயல் அதிகாரி அனில் மிஸ்ராம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதைத்தொடர்ந்து அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு சென்ற முதன்மை செயல் அதிகாரி அனில் மிஸ்ராம் அங்கு வேளா விற்பனைக்குழு சார்பில் டிஜிட்டல் முறையில் வைக்க பட்டிருந்த வேளா விளைபொருட்களின் இன்றைய விலை நிலவரம் குறித்த விளம்பர பலகையை ம் பார்வையிட்டார்.

கொ  பரைத்தேங்காய் கட்டுமானபணி

அதனைத் தொடர்ந்து ஊரக உள்கட்டமை  பு மேம்பாட்டு வளர்ச்சி நிதித்திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் மதி பீட்டில் 2 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொ    ட புதிய கொ  பரைத்தேங்காய் மற்றும் வேளா     விளைபொருட்கள் சேமி  பு இரு  பு கிடங்கின் கட்டுமான பணியினை பார்வையிட்டு அவர் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட கலெக்டர் ச     முகம், தமிழ்நாடு வேளா     விற்பனை வாரிய துணை செயலாளர் ராமசாமி, செயற்பொறியாளர் ஜவஹர், வேளா     இணை இயக்குநர் பயிற்சி மற்றும் தனி அதிகாரி கிருஷ்ணமூர்த்தி, ஈரோடு வேளா     விற்பனைக்குழு (பொறு  பு) வே.பரமசிவம், ஈரோடு வேளா     விற்பனை குழு செயலாளர் ஆர்.என்.முருகானந்தம், ஈரோடு ஆர்.டி.ஓ. ஆர்.சுகுமார், பெருந்துறை தாசில்தார் ஜான்சிராணி, செய்தி மக்கள் தொடர்பு அதிகாரி ஜெ.சவுந்தரபா     டியன் ஆகியோர் உடன் இருந்தனர்.